For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

● ஜூன் 2026 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் ●விலை : ரூ 60 ●இதழ் 73




## இருள் நீக்க வந்தவர்களின் பாதச்சுவடுகள்...

வரலாற்றின் பக்கங்களில் என்றும் அழியாதவை!






www.christianhistoricalsociety.in

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்
மாத இதழ் 73 | ஜூன் 2026

## வரலாற்றுப் பயணத்தில் ஏழாம் ஆண்டின் உதயம்!

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.**

2020-ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஒரு சிறிய விதையாக, பெருத்த நம்பிக்கையோடு துவங்கப்பட்டதே நமது "கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" மாத ஆய்விதழ். இன்று உங்கள் அனைவருடைய ஜெபத்தினாலும், ஊக்கத்தினாலும் வெற்றிகரமாக ஆறு ஆண்டுகளை நிறைவு செய்து, ஏழாம் ஆண்டின் துவக்க விழாவில் அடியெடுத்து வைக்கிறோம் என்பதை நினைக்கும் போது என் உள்ளம் நன்றியால் நிறைகிறது.

"இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்"" (1 சாமுவேல் 7:12) என்ற எபினேசரின் வார்த்தைகளே இந்த நன்னாளில் என் நினைவுக்கு வருகிறது.

நமது சங்கம் தொடங்கப்பட்டதற்கான ஆணிவேரான ஒரு வேத வசனம் உண்டு.

"பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப் பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்." (உபாகமம் 32:7).

இந்த இறைவாக்கிற்கு கீழ்ப்படிந்துதான் கடந்த ஆறு ஆண்டுகளாக நமது பயணம் அமைந்திருக்கிறது. மறைக்கப்பட்ட, மறக்கப்பட்ட பல மிஷனரிகளின் தியாகங்கள், அவர்கள் விட்டுச்சென்ற அழியாத சுவடுகள், பழமையான ஆலயங்களின் தோற்றம், ஆதி திருச்சபையின் வேர்கள் என பல சரித்திரப் பொக்கிஷங்களை தேடிச் சென்று வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

"பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்" (சங்கீதம் 143:5) என்று சங்கீதக்காரன் பாடியது போல, நம் முன்னோர்களின் விசுவாச ஓட்டத்தை வாசிக்கும் ஒவ்வொரு முறையும், அது இன்றைய தலைமுறைக்கு ஒரு மாபெரும் உந்துசக்தியாக மாறுகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பழமையான நூல்களை தேடிக் கண்டுபிடிப்பது, அவற்றை டிஜிட்டல் முறையில் ஆவணமாக்குவது, மறுபதிப்பு செய்வது என பல சவாலான பணிகளை நாம் கடந்து வந்திருக்கிறோம். வாசிப்புப் பழக்கம் குறைந்து வரும் இக்காலக்கட்டத்தில், சரித்திரத்தின் மீது தாகம் கொண்ட ஒரு மாபெரும் வாசகர் குடும்பத்தை தேவன் நமக்குத் தந்துள்ளார் என்பதே இந்த இதழின் மிகப்பெரிய வெற்றி.

இந்த வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து சுழல, தோளோடு தோள் கொடுத்து உழைக்கும் ஆய்வாளர்கள், கட்டுரையாசிரியர்கள், மாதாமாதம் இதழைத் தொடர்ந்து வாசிக்கும் சந்தாதாரர்கள், மற்றும் தாமாக முன்வந்து நன்கொடை அளித்து தாங்கும் நல்உள்ளங்கள் அனைவருக்கும் இந்த ஏழாம் ஆண்டு துவக்க விழாவில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சபையின் வரலாறு என்பது வெறுமனே கடந்த காலத்தின் பதிவு மட்டுமல்ல; அது வருங்கால சந்ததிக்கு நாம் விட்டுச்செல்லும் நம்பிக்கையின் கலங்கரை விளக்கம்! ஏழாம் ஆண்டில் இன்னும் பல புதிய சரித்திரப் பக்கங்களை உங்களோடு பகிர தேவன் தாமே நமக்கு கிருபை செய்வாராக.

தொடர்ந்து பயணியுங்கள், தொடர்ந்து ஜெபியுங்கள்!

**கிறிஸ்துவின் பணியில்,**

மன்னா செல்வகுமார்

Manna Selvakkumar

**ஆசிரியர்: மன்னா செல்வகுமார்**
**வடிவமைப்பு: சுஜித் ரெக்ஸ்**
**வெளியீடு: கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**

www.christianhistoricalsociety.in
+91 9176780001

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு. தனிப்பட்ட சுழற்சிக்கு மட்டும். சந்தா விபரங்கள் மற்றும் நன்கொடை அளிக்கும் முறைகள் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.





## Christian Historical Society

திருநெல்வேலியின் கல்வி மற்றும் ஆன்மீக வரலாற்றைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஜேசிபி இயந்திரங்களால் தகர்க்கப்படுவது ஒரு வரலாற்றுப் படுகொலைக்குச் சமமாகும். 1785-ல் அன்னை கிளாரிந்தா (Clarinda) விதைத்த கல்விப் பயிர், ரேனியஸ் (Rhenius) அவர்களால் வளர்க்கப்பட்டு, சாப்டர் (Schaffter) குடும்பத்தினரால் ஒரு மாபெரும் ஆலமரமாக உருவெடுத்தது. அத்தகைய பெருமைமிக்க குடும்பத்தின் நினைவிடங்கள் இன்று காணாமல் போயிருப்பது திருநெல்வேலி மண்ணிற்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.


### 1. பால் பசிஃபிக் சாப்டர் (Rev. Paul Pacifique Schaffter): திருச்சபையை ஒன்றிணைத்தவர்

ரேனியஸ் ஐயரின் மறைவுக்குப் பின் திருநெல்வேலி திருச்சபையில் ஏற்பட்ட மிகப்பெரிய பிளவைத் தடுத்து, 1843-ல் சமாதானத்தை நிலைநாட்டியதில் அருட்திரு பால் பசிஃபிக் சாப்டர் அவர்களின் பங்கு மகத்தானது.

**ஆவணச் சான்று:** 1824 நவம்பர் 30 அன்று கலெக்டரிடமிருந்து பெறப்பட்ட இந்த அடைக்கலாபுரம் (முருகன்குறிச்சி) கல்லறைத் தோட்டத்தில், சுவிசேஷபுரத்தின் மிஷனரியான இவர் 1861 டிசம்பர் 15 அன்று அடக்கம் செய்யப்பட்டார் என்பதைத் திருச்சபை ஆவணங்கள் (Burial Register 1861) உறுதிப்படுத்துகின்றன.


* இது பாளையங்கோட்டை அடைக்கலபுரம் கல்லறைத்தோட்டமாகும். அது 1824 நவம்பர் 30-ம் நாள் மிஷனுக்குச் சொந்தமாகக் கலெக்டரிடமிருந்து பெறப்பட்டது. சுவாமியடியாரே அதில் கல்லடக்கமான முதல் கிறிஸ்தவர்.

** Missionary Register 1825 pp 540 — 541


BURIALS at Palamcottah

| When Died. | Cause of death | Christian. | Surname. | Age. | Quality, Trade or Profession, &c. &c. &c. |
|---|---|---|---|---|---|
| 12 November 1860 | Cholera | William | Morris | 27 years | Band Corporal 17th Regt N. I. |
| 20 April 1861 | Asthma | Sarah Maria | Lovett | 43 years | wife of George Lovett Pensioned Conductor of Ordnance |
| 16th July 1861 | Disease of the heart | James Christopher | Armau | 35 years | Deputy Post master Palamcottah |
| 15th December 1861 | Diarrhœa | Paul Pacifique | Schaffter | 60 years | Missionary of the C. M. S. Suviseshapuram |

அவரோடு சேர்த்து, அவரது நான்கு பிஞ்சு குழந்தைகளின் (லிடியா, ஜார்ஜ், ஹென்றி, மார்த்தா) கல்லறைகளும் இதே இடத்தில் தான் இருந்தன.

### 2. ஹென்றி ஜேம்ஸ் சாப்டர் (Principal H. J.

**Schaffter): கல்விப் புரட்சியாளர்**

பால் பசிஃபிக் சாப்டரின் மகனான ஹென்றி ஜேம்ஸ் சாப்டர், திருநெல்வேலியின் உயர் கல்வியைத் தீர்மானித்தவர். 1878 முதல் 1920 வரை சுமார் 42 ஆண்டுகள் முதல்வராகப் பணியாற்றி, இன்றைய பாளையங்கோட்டை புனித ஜான்ஸ் கல்லூரியையும், சாப்டர் பள்ளியையும் உருவாக்கியவர் இவரே.

**சாதிச் சுவர்களைத் தகர்த்த கல்வி:** 1900-ம் ஆண்டில், ஒரு 'தாழ்த்தப்பட்ட' சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மாணவனுக்கு இரண்டு பிராமண மாணவர்கள் குடை பிடித்துச் சென்ற 'அதிசயத்தை' இவர் பதிவு செய்துள்ளார். கல்வியின் மூலம் தீண்டாமையை ஒழிக்க முடியும் என மெய்ப்பித்தவர் இவர்.

**நிலம் வாங்கிய வரலாறு:** இன்று நாம் காணும் சாப்டர் பள்ளி அமைந்துள்ள 21 ஏக்கர் நிலத்தை 1895-ல் ₹5,450-க்கு வாங்கி, ₹65,000 செலவில் பிரம்மாண்டமான கல்லூரி கட்டிடத்தை 1897-ல் கட்டி முடித்தார்.

1916-ல் முதலாம் உலகப் போரால் கல்லூரி மூடப்படும் நிலை வந்தபோது, உள்ளூர் நிர்வாகத்திடம் (DCC) ஒப்படைத்து அதைக் காப்பாற்றினார்.

## 3. டிஃபானி சாப்டரின் வருகையும், கசப்பான உண்மையும்

கடந்த சில மாதங்களுக்கு முன்பு லண்டனிலிருந்து தனது முன்னோர்களின் நினைவிடங்களைத் தேடி வந்த திருமதி டிஃபானி சாப்டர் (Mrs. Tiffany Schaffter) கண்ட காட்சி நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது.

42 ஆண்டுகள் தன் வாழ்வைத் திருநெல்வேலிக்காகத் தியாகம் செய்த ஒரு குடும்பத்தின் கல்லறைகள், ஜேசிபி இயந்திரங்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

அங்குள்ள நிர்வாகிகள் "இங்கு அத்தகைய கல்லறைகளே இல்லை" என்று ஒரு வரலாற்றுப் பொய்யைச் சொல்லி அவர்களை அனுப்பி வைத்ததாக தகவல் கிடைத்தது. ஆனால், ஆவணங்கள் அந்த இடத்தில்தான் சாப்டர் குடும்பத்தினர் விதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்கின்றன.

## 4. மீறப்பட்ட வாக்குறுதியும், சட்டமும்

இந்த அழிவுச் செயல் என்பது வெறும் கல்லறை இடிப்பு மட்டுமல்ல:

1. **வாக்குறுதி மீறல்:** 1949-ல் இந்திய டொமினியன் அரசு, மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் ஐரோப்பியர்களின் கல்லறைகள் பாதுகாக்கப்படும் என உறுதி அளித்தது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் இச்சொத்துக்கள் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டன.

2. **சட்ட மீறல்:** இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 297-ன் படி, கல்லறைகளை இடிப்பதும், சிதைப்பதும் ஒரு கிரிமினல் குற்றமாகும்.

3. **வரலாற்றுச் சிதைவு:** ரேனியஸ் (1825), பிஷப் சார்ஜெண்ட் (1853), ஸ்ப்ராட் (1853) போன்ற மகத்தான மிஷனரிகளின் குடும்பக் கல்லறைகளும், தமிழறிஞர் ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணப் பிள்ளையின் குழந்தைகளின் கல்லறைகளும் இதே இடத்தில் விதைக்கப்பட்டுள்ளன.






## 5. எஞ்சி நிற்கும் சுவடுகள்

தற்போது இவ்வளவு அழிவுகளுக்குப் பிறகும், ஜான் ஸ்காட் (1833) மற்றும் லூயிஸ் வில்லியம் ரேனியஸ் (1834) ஆகியோரின் கல்லறைகள் மட்டும் அடையாளமாக எஞ்சி நிற்கின்றன. மற்ற அனைத்தும் வெள்ளை அடிக்கப்பட்டு பெயர்கள் மறைக்கப்பட்டோ அல்லது முற்றிலுமாக அழிக்கப்பட்டோ உள்ளன.

திருநெல்வேலியின் **'கல்விச் சிகரங்களை'** உருவாக்கியவர்களின் நினைவிடங்களை இடித்துத் தரைமட்டமாக்கியது ஒரு தீராத வடு. டிஃபானி சாப்டர் அவர்கள் கண்ணீருடன் திரும்பியிருக்கலாம், ஆனால் அவர் விட்டுச் சென்ற கேள்விகள் திருநெல்வேலி மக்களின் மனசாட்சியை உலுக்கிக் கொண்டிருக்கின்றன. எஞ்சியிருக்கும் வரலாற்றுச் சின்னங்களையாவது நாம் காப்போம்; மறைக்கப்பட்ட வரலாற்றை உலகிற்குத் உரக்கச் சொல்வோம்.

# பொதிகை மண்ணில் பூத்த சுவிஸ் மலர்கள்

திருநெல்வேலி மிஷன் வரலாற்றின் நினைவுச் சுவடு







"தங்கள் சொந்த தேசத்தையும், சுகபோகங்களையும் துறந்து, அறியாத ஒரு மண்ணின் மக்களின் அறியாமை இருள் நீக்க வந்தவர்களின் பாதச்சுவடுகள், வரலாற்றின் பக்கங்களில் என்றும் அழியாதவை."

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தென்னிந்தியாவின் ஆன்மிக, சமூக, கல்வி வரலாற்றில் திருநெல்வேலிப் பெருநிலம் ஒரு மிகப்பெரிய மறுமலர்ச்சிக் களமாகத் திகழ்ந்தது. சாதிய ஒடுக்குமுறைகள், அறியாமை, கல்வியின்மை, மற்றும் ஜமீன்தார்களின் ஆதிக்கம் எனப் பல்வேறு சமூகப் சவால்களில் சிக்கித் தவித்த நெல்லை மண்ணிற்கு, ஐரோப்பிய மிஷனரிகளின் வருகை ஒரு புதிய விடியலாக அமைந்தது. அந்த விடியலின் முதன்மைத் தாரகையாக விளங்கியதுதான் சுவிட்சர்லாந்திலிருந்து புறப்பட்டு வந்த சாப்டர் அவரது குடும்பத்தினர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு லண்டனிலிருந்து தனது முன்னோர்களின் நினைவிடங்களைத் தேடி வந்த திருமதி டிஃபானி சாப்டர் (Mrs. Tiffany Schaffter)



# ஓடிப் போனவன்-20

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர்

மணி பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. வடக்கிலிருந்து வீசிய குளிர்ந்த காற்று திண்ணையில் எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கின் சுடரை அவ்வப்போது அசைத்துக்கொண்டிருந்த்து. தொலைவில் நாய்கள் குரைக்கும் சத்தமும், இரவுப் பூச்சிகளின் இடைவிடாத ரீங்காரமும் தவிர ஊரெங்கும் அமைதி நிலவியது.

"இன்னும் தாவீதைக் காணலையே. . . " என்றார் கவலையோடு சத்தியநாதன்.

காலையில் சாத்தான்குளத்திற்குச் சென்றவன், நண்பனின் வீட்டில் நிகழ்ந்த மரணத்தை விசாரித்து விட்டு மாலைக்குள் திரும்பி விடுவதாகச் சொல்லியிருந்தான். ஆனால் இரவு வெகுநேரமாகியும் அவன் வராதது வருத்தமாக இருந்தது.

அருகில் அமர்ந்திருந்த தாவீதின் மாமன் சிரித்துக் கொண்டே,

"வந்துருவான். அறியா பருவத்தில் கண் காணாத தேசத்துக்குப் போயிட்டு திரும்பி வந்தவன் அவன். இங்கிருந்து சாத்தான்குளம் போனவன் வராமலா போயிருவான்? ஒருவேளை அங்கேயே தங்கியிருப்பான். வெள்ளனேயே வந்துருவான் ஐயா. நீங்க கவலைப்படாதீங்க. இப்ப நீங்க உறங்குவது நல்லதையா" என்றார்.

சத்தியநாதன் தலையசைத்தார். ஆனாலும் மனம் அமைதியடையவில்லை. திண்ணையிலிருந்து இறங்கி தெருவை நோக்கி நடந்தார். நிலவொளியில் வெண்மையாகத் தெரிந்த அந்த நீண்ட பாதை வெறிச்சோடியிருந்தது. எட்டிப்பார்த்தார். தொலைவில் யாரும் வருவது போலத் தெரியவில்லை. மீண்டும் வீட்டிற்குள் வந்து முழங்கால் படியிட்டு ஜெபித்தார்.

"கர்த்தாவே, உமது ஊழியக்காரனை பாதுகாத்தருளும்." என்று ஜெபித்து விட்டுப் படுக்கச் சென்றார். கண்கள் அயர்ந்திருந்தாலும் உறக்கம் வரவில்லை.

சற்று நேரத்தில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

சத்தியநாதன் திடுக்கிட்டு எழுந்தார். மாமனும் உடனே விழித்துக் கொண்டார்.

"இந்த நேரத்துல. . . . தாவீதா இருக்கலாம்?" என்று கூறிக்கொண்டே சத்தியநாதன் கதவைத் திறந்தார். தாவீதேதான். நீண்ட பயணத்தின் களைப்பு அவன் முகத்தில் தெரிந்தாலும், அவன் கண்களில் விசித்திரமான மகிழ்ச்சி ஒளிந்திருந்தது.

"தாவீது!" என்ற சத்தியநாதன் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

**மாமன் அருகே வந்து,**

"என்னப்பா! இந்த நேரத்துல வரணுமா? காலையில வந்திருக்கலாமே! சோறு தின்னியாயாப்பா, ரொம்ப அசதியா இருக்கியே. . . . வாயா." என்றார்.

தாவீது புன்னகைத்தபடியே உள்ளே சென்றான். தண்ணீர் குடித்துவிட்டு சற்றுநேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பின்னர் முகம் மலர்ந்து,

"அதெல்லாம் ஒன்னுமில்ல மாமா, இன்று கர்த்தர் செய்ததை நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். . . " என்றான்.

**"அப்படியா, என்ன நடந்தது தாவீது?!"**

"நான் சாத்தான்குளத்திலிருந்து மதியமே சண்முகபுரம் வந்துவிட்டேன். அங்கே கடந்த வாரம் நம்ம வீட்டுக்கு வந்து ஜெபத்தில் கலந்து கொண்ட குமரவேலும், ராசப்பனும் வழியில் என்னைப் பார்த்தார்கள். உடனே மிகுந்த அன்போடு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்கள் மட்டும் இல்ல ஐயா. பக்கத்து வீட்டாரும் வந்து விட்டார்கள். இவர்கள் இருவரும் நம்மிடம் கேட்டறிந்திருந்த இயேசுவைப் பற்றி ஆவலோடு கேட்கத்தொடங்கினார்கள். எனக்கு ஒரே ஆச்சரியமும் மகிழ்ச்சியுமாக இருந்துச்சி. நான் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த போதே அந்த ஊர் மக்கள் ஒவ்வொருவராக அங்கு வர ஆரம்பித்து விட்டார்கள்.

**என்னையும் என் பேச்சையும் அதிசயமாகப் பார்தார்கள்.**

நான் கர்த்தரின் அன்பைப் பற்றியும், அவர் செய்த அதிசயங்களைப் பற்றியும், இயேசு மனிதர்களுக்காக சிலுவையில் சிந்திய இரத்தத்தைப் பற்றியும் சொன்னேன். அவர்கள் யாருமே எழுந்து செல்லவில்லை. தங்களை மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். சூரியன் மறைந்தும் கூட்டம் கலையவில்லை. இறுதியில் கிட்டத்தட்ட இருபது பேர் வரை அங்கு கூடி விட்டார்கள். "

**தாவீதின் குரலில் இன்னும் அந்த ஆச்சரியம் குறையவில்லை.**

"அவர்கள் கேட்ட கேள்விகளை நீங்கள் கேட்டிருக்க வேண்டும் மாமா! ஒவ்வொருவரின் இதயமும் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறது போலிருந்தது. அங்கே ஒரு பெரிய விளைச்சல் காத்திருக்கிறது என்பது மட்டும் உறுதி. நாளையே நம்மில் ஒருவர் அங்கே சென்று குமரவேல் வீட்டில் ஆராதனை நடத்த வேண்டும். அவர்கள் என்னை அனுப்பவே மனமில்லாமல் இருந்தார்கள். "

அறையில் சில நொடிகள் அமைதி நிலவியது.

சத்தியநாதனின் கண்கள் கலங்கின. மேல் நோக்கிப் பார்த்தார். "கர்த்தருடைய கிருபை பெரியது. நாம் விதைத்த விதையை அவரே முளைக்கச் செய்கிறார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாகட்டும்." என்றார்.

**சில நொடிகள் கழித்து மீண்டும் அவர் பேசத் தொடங்கினார்.**

"தாவீது, இன்று நீ சொல்வதைக் கேட்கும்போது என் மனதில் ஒரு காரியம் தோன்றுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதிகளில் கர்த்தருடைய நாமத்தைக் கேட்க ஒருவர்கூட இல்லை. இன்று மக்கள் தாங்களாகவே கூடி வந்து கேட்கிறார்கள். இது மனிதர்களின் செயல் அல்ல. கர்த்தர் தமது கிரியைகளை ஆரம்பித்திருக்கிறார். "

**தாவீது பணிவோடு தலையசைத்தான்.**

"நானும் அதைத்தான் உணர்கிறேன் ஐயா. சில இடங்களில் நாம் கதவைத் தட்ட வேண்டியிருக்கிறது. சில இடங்களில் கதவுகள் தாமாகவே திறக்கின்றன. சண்முகபுரம் அப்படிப்பட்ட இடமாக எனக்குத் தெரிகிறது. "

**மாமன் உடனே உற்சாகமாக,**

"அப்படின்னா நாளைக்கே அங்க போகணும். இயேசுவின் அன்பை சொல்லனும்" என்றார்.

**"ஆம்,** " என்றார் சத்தியநாதன். "விடியற்காலையிலேயே யார் செல்ல வேண்டும் என்று தீர்மானிப்போம். கர்த்தர் திறந்து வைத்திருக்கும் கதவுகளை நாம் புறக்கணிக்கக் கூடாது. இந்தச் செய்தி இன்னும் பல ஊர்களுக்குப் பரவ வேண்டும். "என்றார்.

அதன்பிறகும் நீண்ட நேரம் அவர்கள் சண்முகபுரத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். அங்குள்ள மக்களின் ஆர்வம், அவர்கள் கேட்ட கேள்விகள், எதிர்காலத்தில் அங்கு உருவாகக்கூடிய சபை என பலவற்றைப் பற்றிய உரையாடல் நள்ளிரவையும் தாண்டியது.

பின்னர் ஒருவர் பின் ஒருவராக உறங்கச் சென்றனர்.

ஆனால் தாவீதின் மனம் மட்டும் உறங்கவில்லை. மெதுவாக எழுந்து வீட்டின் வாசலுக்கு வந்தான். நிலவொளியில் அமைதியாகப் படர்ந்திருந்த பாதையை நோக்கி அவன் பார்வை சென்றது. அந்தப் பாதை **சண்முகபுரத்தை** நோக்கிச் சென்றது.

ஆனால் தாவீதின் மனக்கண்களில் அது ஒரு கிராமத்தை மட்டுமல்ல, இன்னும் இயேசுவின் நாமத்தைக் கேளாத எண்ணற்ற மக்களை நோக்கிச் செல்வதைப் போல தோன்றியது. அந்த இரவு சண்முகபுரத்தில் கூடியிருந்த இருபது பேரின் முகங்களும் அவன் நினைவில் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சென்றன.

**"அறுவடை மிகுதி; வேலையாட்களோ கொஞ்சம்."** என்ற வேதவசனம் அவன் உள்ளத்தில் மீண்டும் ஒலித்தது. குளிர்ந்த இரவுக்காற்று அவன் முகத்தைத் தொட்டது.

வானத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்தபடி அவன் கரங்களை இணைத்தான். **"கர்த்தாவே, நீர் திறக்கும் கதவுகளை எவராலும் அடைக்க முடியாது. எங்களை உமது சித்தத்தின்படி வழிநடத்தும்.**" என்று ஜெபித்துவிட்டு உள்ளே சென்றான். அடுத்த நாள் அவர்களுக்காக என்ன காத்திருக்கிறது என்பதை அறியாமல், அந்தச் சிறிய வீடு நம்பிக்கையின் அமைதிக்குள் உறங்கியது.

ஆனால் அந்த இரவில் சண்முகபுரத்தில் விதைக்கப்பட்ட சிறிய விதை, வருங்காலத்தில் தென் திருநெல்வேலியின் பல கிராமங்களில் பரவப்போகும் ஒரு பெரிய ஆன்மீக எழுச்சியின் தொடக்கமாக மாறும் என்பதை அப்போது அவர்கள் யாரும் அறிந்திருக்கவில்லை.

தொடர்ந்து பயணிப்போம்...




பத்தொன்பதாம் நூற்றாண்டில், திருநெல்வேலி மிஷனரி வரலாற்றில் கடற்கரை நகரமான தூத்துக்குடி மிக முக்கியப் பங்காற்றியது. உள்நாட்டுப் பகுதிகளில் நிலவிய கடுமையான காலநிலை மற்றும் போதிய மருத்துவ வசதியின்மையால் பாதிக்கப்பட்ட மிஷனரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தற்காலிகமாகத் தங்கிப் பணியாற்றவும் தூத்துக்குடியைப் பயன்படுத்தினர். இவ்வகையில், மிஷனரிகள் டேவிட் ரோசன், ஜே. எல். இரியான் மற்றும் பிற்காலத்தில் பேராயர் கால்டுவெல் ஆகியோர் தங்கியிருந்த தூத்துக்குடி இல்லங்கள் திருச்சபை வரலாற்றில் ஆழமான தடம் பதித்துள்ளன.

### 1. திரு. ரோஸ்மாலி காக் இல்லமும் டேவிட் ரோசனின் வருகையும் (1829)

மிஷனரி டேவிட் ரோசன் (David Rosen) அவர்கள் திருநெல்வேலி மிஷனின் பொறுப்பை ஏற்பதற்காக 1829-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கடல்வழியாகப் பயணத்தைத் தொடங்கினார். சுமார் 19 நாட்கள் நீடித்த நெடிய கடல் பயணத்திற்குப் பிறகு, நவம்பர் 3, 1829 அன்று தூத்துக்குடிக் கரையை அவர் நெருங்கினார்.

மறுநாள் நவம்பர் 4 அன்று, 'தோணி' (Dhony) எனப்படும் சிறிய படகு மூலமாக ஐந்து மைல் தூரத்தைக் கடந்து அவர் தூத்துக்குடி கரையில் இறங்கினார். அப்போது அங்குள்ள ஆங்கிலேய அரசின் காவல் கண்காணிப்பாளராகப் (Superintendent of Police) பணியாற்றி வந்த திரு. ரோஸ்மாலி காக் (Mr. Rosemaly Kock) அவர்கள் மிஷனரி ரோசனை அன்போடு வரவேற்றார்.

ரோசனைத் தனது சொந்த இல்லத்திற்கு அழைத்துச் சென்ற திரு. காக், அங்கு அவருக்கு இரண்டு நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்கான வசதிகளைச் செய்து தந்து, மிகச் சிறந்த முறையில் உபசரித்தார். தூத்துக்குடி அப்போது வறண்ட, கடுமையான வெயில் நிலவிய, குடிநீருக்குப் பற்றாக்குறையுள்ள பகுதியாக இருந்தபோதிலும், திரு. காக்கின் இல்லத்தில் கிடைத்த இந்த அன்பான வரவேற்பு ரோசனுக்குப் புதிய ஊக்கத்தை அளித்தது. இங்கிருந்தபடியே தூத்துக்குடியில் டச்சுக்காரர்களால் கட்டப்பட்டிருந்த பழைய தேவாலயத்தையும், அங்கு வாழ்ந்த பூர்வகுடி கிறிஸ்தவர்களையும் ரோசன் பார்வையிட்டார்.

### 2. டேவிட் ரோசனின் தூத்துக்குடி இல்லம் (1830)

மிஷனரி ரோசன் அவர்களின் முதன்மைப் பணித்தளமாக நாசரேத் (Nazareth) விளங்கியது. எனினும், நாசரேத் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் ஐரோப்பிய மிஷனரிகள் தங்குவதற்கு ஏற்ற முறையான இல்லங்களோ அல்லது போதிய சுகாதார வசதிகளோ அந்த காலகட்டத்தில் உருவாக்கப்படவில்லை. அங்குள்ள தற்காலிக மண் குடிசைகளில் தங்குவது உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தும் எனப் போதகர்கள் கருதினர்.

எனவே, மிஷனரி ரோசன் தூத்துக்குடியிலேயே

தங்கித் தனது ஆன்மீக மற்றும் கல்விப் பணிகளை ஒருங்கிணைக்க முடிவு செய்தார். இதற்காக அவர் தூத்துக்குடி கோட்டைப் பகுதியில் ஒரு சிறிய இல்லத்தை (small house) வாடகைக்கு எடுத்துத் தங்கினார். அங்கு தங்கியிருந்தபடியே நாசரேத், முதலூர் மற்றும் இதர கிராமங்களுக்குத் தனது ஆன்மீகப் பயணங்களை மேற்கொண்டு மிஷன் பணிகளை வழிநடத்தினார்.

### 3. மிஷனரி ஜே. எல். இரியான் தங்குமிடம் (1836)

நெதர்லாந்தைச் (Holland) சேர்ந்த மிஷனரி ஜே. எல். இரியான் (J. L. Irion) 1829-இல் இந்தியா வந்து சேர்ந்தார். அவர் தரங்கம்பாடியில் (Tranquebar) தங்கியிருந்தபோது அவரது உடல்நிலை ஓரளவு முன்னேற்றமடைந்தது. எனினும் அவர் தொடர்ந்து உடல்நலக் குறைவாலும் காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

இதற்கிடையில், ஜூலை 17, 1836 அன்று இரியான் தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தார். அவர் உடனடியாக நாசரேத்திற்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்று சென்னை கமிட்டி (Madras Committee) அறிவுறுத்தியது. ஆனால், அப்போது நாசரேத்தில் மிஷனரி இல்லம் கட்டப்பட்டு வரும் நிலையில் இருந்தது.

முன்னரே அங்கிருந்த மிஷனரி டேவிட் ரோசன், ஜூன் 9, 1836 தேதியிட்ட கடிதத்தில், நாசரேத்தில் உள்ள தற்காலிக இல்லத்தில் இரியான் தங்குவது அவரது பலவீனமான உடல்நலத்திற்குப் பெரும் பாதிப்பை (injurious to health) ஏற்படுத்தும் என்று சென்னை கமிட்டிக்கு எழுதினார். எனவே, சென்னை கமிட்டியின் அனுமதியோடும், இரியானின் சொந்த வேண்டுகோளின்படியும், அவர் நாசரேத் இல்லம் தயாராகும் வரையிலும் மற்றும் அவரது உடல்நிலை சீராகும் வரையிலும் தூத்துக்குடியில் ஒரு இல்லத்தில் தற்காலிகமாகத் தங்கிப் பணியாற்ற அனுமதிக்கப்பட்டார்.

### 4. பேராயர் கால்டுவெல் அவர்களின் தூத்துக்குடி இல்லத் தொடர்பு (1883-க்கு பின்)

டேவிட் ரோசன் மற்றும் ஜே. எல். இரியான் ஆகியோர் தங்கியிருந்த இதே தூத்துக்குடி எஸ்.பி.ஜி (S.P.G.) மிஷன் வளாகமும் இல்லமும்தான் பிற்காலத்தில் பேராயர் கால்டுவெல் அவர்களின் வாழ்வோடும் ஆழமாக இணைந்தது.

1877-இல் பேராயராக (Bishop) பொறுப்பேற்ற கால்டுவெல் அவர்கள், தொடக்கத்தில் இடையன்குடியில் தங்கியிருந்தாலும், மிஷனரி நிர்வாகப் பணிகளை எளிமைப்படுத்தவும், வளர்ந்து வந்த திருச்சபையை வழிநடத்தவும் 1883-ஆம் ஆண்டு வாக்கில் தனது தலைமையகத்தைத் தூத்துக்குடிக்கு மாற்றினார். அங்கு அவர் இதே தூத்துக்குடி மிஷன் இல்லத்தில் (S.P.G. Mission House/Bungalow) தங்கித் தனது இறுதி காலம் வரை பல ஆண்டுகள் பணியாற்றினார்.

இவ்வாறு 1829-இல் டேவிட் ரோசனின் தற்காலிகத் தங்குமிடமாகத் தொடங்கி, 1836-இல் இரியானின் புகலிடமாக விளங்கி, இறுதியாக 1880-களில் பேராயர் கால்டுவெல் அவர்களின் தலைமையகமாக மாறிய தூத்துக்குடி மிஷன் இல்லம், திருநெல்வேலி திருச்சபை வரலாற்றின் மிக முக்கியத் தூண்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**மன்னா செல்வகுமார்**
**கிறிஸ்தவ வரலாற்றுச் ஆய்வாளர்**



## மூடுபனியில் மிதக்கும் நினைவுகள்...

# காதலின் கல்லறை!

### CSI கிறிஸ்து ஆலயம், மூணாறு

பேகம் பொம்மை ஷாந்தகுமார்



மூடுபனியில் மிதக்கும் அழகிய மலைச் சரிவுகள், பச்சைத் தேயிலைத் தோட்டங்கள்-அவற்றின் நடுவே அமைதியாக நிற்கிறது மூணாறின் CSI கிறிஸ்து ஆலயம். அதன் பக்கத்தில் உள்ள ஒரு கல்லறை, காலத்தால் அழியாத ஒரு இதமானக் காதல் கதையை கிசுகிசுத்துக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு காதல் கதையும் அழகானதே. ஆனால் எலினோர் இசபெல் மற்றும் ஹென்றி மான்ஸ்ஃபீல்ட் நைட் ஆகியோரின் காதல்... யாருடைய மனதையும் எளிதாகத் தொட்டு விடும் சோகக் கதை! ஆழமான மனதில் அழியாத சின்னமாக இன்றும் நிற்கிறது.

1894-ல் திருமணம் முடித்து, ஹனிமூனுக்காக மூணாறுக்கு ஆயிரம் கனவுகளோடு வந்தனர் இங்கிலாந்து தம்பதியினர்-தேயிலைத் தோட்ட மேலாளரான, ஹென்றி மற்றும் அவரது இளமையான மனைவி இசபெல்.

மூணாறின் இயற்கை அழகில் மயங்கிய இசபெல், **"நான் இறந்தால் இந்த மலை மேல் என்னை அடக்கம் செய்யுங்கள்"** என்று சிரித்தபடி கூறினார். அவர் விளையாட்டாகத் தான் கூறினார். ஆனால் விதி? அந்தச் சிரிப்பை சோகமாக மாற்றியது. மறுநாளே காச நோயால் பாதிக்கப்பட்டு, வெறும் 24-வது இள வயதில் அவர் உயிரிழந்தார்.

உடைந்த இதயத்துடன் இருந்தாலும், அளவற்ற காதலுடன், ஹென்றி தனது மனைவியின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றினார். மலை மேல் அமைந்த அந்தக் கல்லறை இன்று **"மூணாறின் தாஜ்மகால்"** என அழைக்கப் படுகிறது-மரபுக் கல்லால் அல்ல, ஆழமான இதயக் காதலால் கட்டப்பட்ட நினைவுச் சின்னம்.

1900-ஆம் ஆண்டு இந்தக் கல்லறைத் தோட்டம் அதிகாரப் பூர்வமாக அர்ப்பணிக்கப் பட்டது. பின்னர் 1910-இல் தனது மனைவியின் நினைவாக ஹென்றி நைட் இந்த ஆலயத்தின் அடிக் கல்லை நாட்டினார். உள்ளூர் கற்களால் கட்டப்பட்ட இந்த ஆலயம் கோத்திக் கட்டடக் கலையின் அழகை பிரதிபலிக்கிறது. கண்ணாடி ஓவியங்கள், சாய்வு கூரைகள், பழமையான விளக்குகள்- அனைத்தும் ஒரு காலப் பயணத்தை உணர்த்துகின்றன. ஸ்காட்லாந்திலிருந்து அன்போடு கொண்டு வரப்பட்ட மணி, கடிகாரம், பியானோ ஆகியவை இன்னும் இங்கு காட்சியளிக்கின்றன.

"திரளான தண்ணீர்கள் அன்பை அணைத்து விட முடியாது! மூழ்கடிக்கவும் முடியாது"- உன்னதப்பாட்டு 8:7.

1900-ஆம் ஆண்டு இந்தக் கல்லறைத் தோட்டம் அதிகாரப் பூர்வமாக அர்ப்பணிக்கப் பட்டது. பின்னர், 1910-இல், தனது மனைவியின் நினைவாக ஹென்றி

நைட் இந்த ஆலயத்தின் அடிக் கல்லை நாட்டினார்.

1911 ஏப்ரல் 16-ஆம் தேதி ஈஸ்டர் தினத்தில் இந்த ஆலயம் திறக்கப்பட்டது-இறப்புக்கு அப்பாற்பட்ட நம்பிக்கையின் அடையாளமாக. 1922-இல் அன்றைய பிரிட்டிஷ் கவர்னரான வெல்லிங்டன் பிரபு இவ்வாலயத்துக்கு வந்து ரூ. 25-ஐ மானியமாக வழங்கினார். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர், இது CSI திருச்சபைக்கு ஒப்படைக்கப் பட்டது.

**"அன்பு மட்டுமே ஒரு மனிதனுக்குள் உயிரோட்டத்தையும், அர்த்தமுள்ள வாழ்க்கையையும் தருகிறது! அன்பும், மனித நேயமும் நிறைந்த இடத்தில் எப்போதும் மகிழ்ச்சியும் உயிர்ச் சக்தியும் நிலைத்திருக்கும்!"** என்று மகாத்மா காந்தி கூறியது இங்கே நிஜமாக உணரப் படுகிறது.

1924-ம் ஆண்டின் பெரு வெள்ளத்தில், இந்த ஆலயம் பலருக்கு பாதுகாப்பான அடைக்கலமாக இருந்ததாகச் சொல்லப் படுகிறது. அதுபோல் இன்று கூட, வாழ்க்கையின் புயல்களில் சிக்கியவர்களுக்கு இது அமைதியின் தங்கும் தளமாக இருக்கிறது.

இந்த ஆலயத்தின் சுவர்கள் சிமெண்டு பூச்சு இன்றி இயல்பான கற்களாகவே இருப்பது அதன் தனிச் சிறப்பு. ஆலயம் கட்டப்படுவதற்கு முன்பே கல்லறை இருந்தது என்பது இதன் வரலாற்றுப் பெருமை. சுவர்களில் பதிக்கப் பட்டுள்ள பித்தளை பலகைகள், பழைய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பெயர்களை நினைவு கூர்கின்றன.

**"அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும்!"**-1 கொரிந்தியர் 13:7

இன்று இங்கு தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் ஆராதனை நடை பெறுகிறது-மொழிகளைத் தாண்டி மனிதர்களை இணைக்கும் விசுவாசத்தின் பாலமாக!

**"இரண்டு உடல்களில் வாழும் ஒரே ஆன்மா தான் அன்பு"**-அரிஸ்டாட்டில்

இந்த ஆலயம் கற்களால் கட்டப்பட்ட கட்டடம் மட்டுமல்ல; இது காதல், இழப்பு, நினைவு, நம்பிக்கை ஆகிய அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் உயிருள்ள வரலாறு.

மூடுபனியில் மறைந்தாலும்... உண்மையான காதல் எப்பொழுதும் உயரத்தில் நிலைத்து நிற்கும்!

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com




**சுரண்டை, ஜூன் 5:**

**Christian Historical Society**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சுரண்டையில் அமைந்துள்ள கிறிஸ்தவ வரலாற்று நூலகம் மற்றும் அருங்காட்சியக வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுரண்டை காவல் ஆய்வாளர் மதிப்பிற்குரிய திரு. இ. சாம்சன் அவர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல்துறையினர் பங்கேற்று பல்வேறு வகையான உயர்ரக மரக்கன்றுகளை நட்டனர். மேலும், "கலாமின் கனவுகள்" அமைப்பின் நிறுவனர் திரு. சுமு முருகன் மற்றும் அதன் இயக்கத் தலைவர்கள், "நம்ம சுரண்டை" முகநூல் நண்பர்கள் குழுவினரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தனர்.

சுரண்டை வரலாற்றுச் சங்கத்தின் பொறுப்பாளர் திரு. டி.டி.வி. சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆலடிப்பட்டி தர்மம் சங்க நிர்வாகிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தினர்.

கிறிஸ்தவ வரலாற்று நூலகம் மற்றும் அருங்காட்சியகத்திற்கு முன்பாக பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டு, அவற்றைப் பாதுகாத்து வளர்க்க உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவில், வரலாற்றுச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. மன்னா செல்வகுமார் அவர்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து பேசினார்





சரித்திரச் சிறுகதை

# கடைசி பிரசங்கம்

ராஜ்ஜா

அன்றும் கோயிலில் கட்டுக்கடங்காத கூட்டம். தன் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் இப்படி அலை கடலென திரண்டு வந்திருக்கிறார்களே என்று மகிழ்ச்சி பெருவெள்ளத்தில் மூழ்கிப் போனார் பாதிரியார் பீட்டர் முலன்பர்க். தான் அணிந்திருந்த தும்பைப் பூ அங்கியை கடைசி முறையாக பார்த்துக் கொண்டார். அப்பழுக்கில்லா அங்கியை நினைத்து பெருமைபட்டுக் கொண்டார். படித்து கிழித்த விவிலியத்தை திறக்கும் போது இனி என்று இதை தொடப் போகிறோம் என்ற எண்ணத்தோடு பார்த்தார். வாழ்க்கையில் எதுவுமே சொந்தமில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

மாதா கோயிலினுள் பிரசங்க மேடையில் இருந்த பாதிரியார் தன் முன் இருந்தவர்களின் மீது கண்களை ஓட விட்டார். அவரது கண்களில் நீர் வெகுண்டு வெளிவருவது போல் இருந்தது. ரெப்பைகளை மூடி மூடித் திறந்து கண்ணீருக்கு வேலி போட்டுக் கொண்டார்.

எத்தனையோ ஞாயிறு காலை வேளைகளில் விவிலியத்தின் வாசகங்களை வைத்து பிரசங்கம் செய்து கோயிலில் உட்காரவே இடம் இல்லா அளவிற்கு மக்களை ஈர்த்திருக்கிறார்.

ஒன்று சொன்னாலும் அதை நன்றே சொல்லிச் செல்பவர் பீட்டர் பாதிரியார். அந்த ஊர் மக்களுக்கு மாதாவின் மீது அதிக மரியாதை இருந்தது. அதை அவர்களுக்கு ஏற்படுத்தியவர் அவரே. தலை போகிற காரியமாக இருந்தாலும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூசைக்கு எப்படியாவது கோயிலில் வந்து மக்கள் இடம் பிடித்துக் கொள்வது வழக்கம்.

எந்த வாசகத்தை வைத்து பிரசங்கம் செய்ய வேண்டும் என்று திடமான முடிவு எடுத்திருந்தார். அன்றைய பிரசங்கமே தன் பிரசங்கங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாய் அமையவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

பாதிரியார் முற்றும் துறந்தவர்தான் என்றாலும், அவருக்குள்ளும் ஓர் ஆசை இருந்து கொண்டே அவரை பல நாட்கள் தூங்க விடாமல் செய்தது. அதற்கெல்லாம் முடிவு கட்டும் வகையில் ஆழமாக சிந்தித்து, ஆனால் யாரையும் கலந்து ஆலோசிக்காமல் ஒரு முடிவை எடுத்து விட்டார். அந்தத் தீர்க்கமான முடிவை மக்களுக்கு அன்று சொல்லியே ஆக வேண்டும்... வேறு வழி இல்லை. கோயிலுள் இருப்பவர்கள் எத்தனை பேர் அவர் முடிவை ஆதரிப்பார்கள், எத்தனை பேர் நிராகரிப்பார்கள் என்றெல்லாம் அவர் யோசனை செய்யவே இல்லை. அவரது மூளைக்குள் நெலிந்ததெல்லாம் ஒரே ஒரு விவிலிய வாசகம்தான் : **"சீசருக்கு சேர வேண்டியதை**

**சீசருக்கும், ஆண்டவருக்கு சேர வேண்டியதை ஆண்டவருக்கும் கொடுத்து விடுங்கள்".** படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயிலை என்ற பழமொழிக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் அவர். சொல்வதைத்தான் செய்வார்... செய்வதைத்தான் சொல்வார்.

என்னதான் முடிவு எடுத்திருந்தாலும் அவருக்குள் இன்னொரு சந்தேகம் கிளம்பி வரத்தான் செய்தது. "அன்பையே விதைத்த ஏசுபிரான் துப்பாக்கியையும் தோட்டாக்களையும் எக்காரணத்தைக் கொண்டாவது கையில் எடுத்திருப்பாரா? அவர் காலத்தில் இரண்டுமே இல்லை என்றாலும் கையில் கிடைத்த ஆயுதத்தையாவது எடுத்திருப்பாரா? உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று போதித்தவர் எந்த மனதோடு ஆயுதத்தை எடுப்பார்?

ஏசுநாதரின் புகழ் பரப்பவே பாதிரியார் பணியில் இருந்தாலும் தனக்கென்று வகுத்துக் கொண்ட பாதையை எவருக்காகவும் ஓரங்கட்டக் கூடாது என்ற நிரந்தரமான எண்ணத்தில் இருந்தார்.

**"ஆண்டவரே உன் புகழ் ஓங்குக... ஆண்டவரே பேசும் உமது அடியால் கேட்கின்றேன்... செவி சாய்கின்றேன்,"** என்று சொல்லி தன் பிரசங்கத்தை ஆரம்பித்தார் பாதிரியார். கப் சிப் கருவாட்டு வால் ஆனது சபை. **"அது அதற்கும் நேரம் காலம் உண்டு. இரண்டுமே ஆண்டவனின் கைகளிலே. நம் கைகளில் ஒன்றும் இல்லை,"** என்று சொல்லி தன் இரண்டு கைகளையும் திறந்து காண்பித்தார். சபையில் அமர்ந்திருந்தவர்களும் தங்கள் கைகளை விரித்துப் பார்த்துக் கொண்டார்கள்... இதுதான் போதனையின் சாதனை என்பதோ!

பாதிரியார் தொடர்ந்தார்: "சபை உரையாளரிலிருந்து மூன்றாம் வாசகம்... பிறப்புக்கு ஒரு காலம்... இறப்புக்கு ஒரு காலம்... அழுகைக்கு ஒரு காலம்... சிரிப்புக்கு ஒரு காலம்... தேடி சேர்ப்பதற்கு ஒரு காலம்... இழப்பதற்கு ஒரு காலம்... காக்க ஒரு காலம்... தூக்கி எறிய ஒரு காலம்... என்று சொல்லிக்கொண்டே தன் வெண்ணிற அங்கியின் வெள்ளை நிற பொத்தான்களை ஒவ்வொன்றாகக் கழட்டினார்.

அவரது வாயையே பார்த்துக்கொண்டிருந்த மக்கள் அவரது திடீர் செய்கையைக் கண்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர் கோயிலினுள் என்றுமே இப்படி செய்தது கிடையாது. இன்று அவருக்கு என்னவாயிற்று? மனித மூளை எப்படியெல்லாம் சிந்தித்து சந்தேகங்களை கிளப்பி விடுமோ அப்படியெல்லாம் கிளப்பிவிட்டது.

"தூக்கியெறிய ஒரு காலம்" என்று சற்றே உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினார். தன் அங்கியை கழற்றி வீசினார். வீசிய வேகத்தில் அது நிலைகுலைந்து தரையில் விழுந்தது. ஏதோ விபத்தில் சிக்கி தூக்கி எறியப்பட்டவரைப் போல அது கிடந்தது. எல்லோர் பார்வையும் அனாதையான அங்கியின் மீது இருந்தது. பாதிரியார் என்ன உள்ளாடை அணிந்திருக்கிறார் என்று பார்க்கக்கூட யாருக்கும் அக்கறை இல்லை. ஏன் இப்படிச் செய்தார் என்று மட்டும் தங்களைத்தானே கேட்டுக் கொண்டது அவரவர் முகத்தில் தெரிந்தது.

"அன்புக்கு ஒரு காலம்... வெறுப்புக்கு ஒரு காலம்," என்றார் பாதிரியார். எல்லோர் கவனமும் பாதிரியார் மீது மீண்டும் திரும்பியது. "அமைதிக்கு ஒரு காலம்... போருக்கு ஒரு காலம்" என்று சொல்லிவிட்டு எல்லோரையும் பார்த்து புன்னகைத்தார். அனைவரும் வாய் பிளந்த வண்ணம் இருந்தனர். இருக்காதா பின்னே! வெள்ளை அங்கி அணிந்திருந்தவர் போர் வீரனின் சிகப்பு நிற சீருடையை அல்லவா அணிந்து மிடுக்குடன் காணப்பட்டார்.

விவிலிய பிரசங்கத்தை நிறுத்திய பாதிரியார் ஆண்டவர் தன் மேற்பார்வையில் இருக்கும்படி சொல்லி அனுப்பிய மந்தையை கரிசனத்தோடு பார்த்தார். எல்லோருமே நெற்றி வேர்வை நிலத்தில் விழ கடுமையாக உழைக்கும் விவசாயிகள், அவர்களது மனைவிமார்கள், மற்றும் பிள்ளைகள்.... அனைவருமே புலம் பெயர்ந்தவர்கள்.

"அன்பர்களே! இது போருக்கான காலம். ஆங்கிலேய சிப்பாய்கள் நாம் குடியிருக்கும் ஊரான வில்லியம்ஸ்பெர்க்கில் நுழைந்து விட்டார்கள். நம் அரசாங்கத்திடம் இருந்த துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும் அபகரித்துக் கொண்டார்கள். சிப்பாய்களில் பலர் நம் வீடுகளில் புகுந்து அராஜகம் பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்... இது போருக்கான காலம்... நாங்கள் விவசாயிகள்தானே போர்வீரர்கள் இல்லையே... எங்களால் என்ன செய்ய முடியும் என்று மட்டும் கேட்டு உங்களுக்குள் தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. போர்வீரர்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது? அவர்களும் ஒரு காலத்திய விவசாயிகள்தானே! நடவுக்கு ஒரு காலம்.. போருக்கு ஒரு காலம் இல்லையா? நம்மில் பலர் இந்நாட்டுக்கு வந்தேறிகளாக வந்தது மன அமைதியைத் தேடித்தானே. அந்த மன அமைதியை குலைக்க வந்தவர்களை

விரட்டி அடிக்கத்தானே வேண்டும். வேறு வழி இல்லையே. எனவே ஆண்டவரிடம் மன்றாடி வேண்டிக் கொள்வோமாக," என்று சொல்லி அவரது வழக்கப்படி பிரசங்கத்தை முடித்து வைத்தார்.

"நான் ஒரு பாதிரியார் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் முதலிலே நான் தேசாபிமானி. என் தாய்நாட்டைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்ற பழமொழி ஞாபகத்துக்கு வருகிறதே! என் உடன் பிறப்புகள் ஓர் முனையில் குருதி சிந்த நான் மட்டும் என் அங்கிக்குள் ஒளிந்து கொண்டு வாழ்வது எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. அதனால்தான் அங்கியை கழட்டி எறிந்து விட்டேன்..

"என்னை நாடு கூப்பிடுகிறது. நிச்சயம் நீ என்னை காப்பாற்ற வரவேண்டும் என்கிறது. நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை அது. ஆண்டவன் கட்டளை அது."

பாதிரியார் பீட்டர் முலன்பர்க் வீறு நடை போட்டு மாதா கோயிலின் பின்புறம் சென்றார். போகும் முன் அவர் கூறிய வார்த்தைகள்: "நீங்களும் போருக்குச் செல்ல ஆயத்தம் ஆகாவிடில், நீங்களும் உங்கள் மன அமைதியை காக்க முற்படாவிடில், காக்க மன அமைதி என்ற ஒன்றே இருக்காது... இருக்காது... இருக்காது."

சில நொடிகளில் கோயில் வாயிலில் போர் முரசு முழங்கியது. பாதிரியார் பீட்டர் தலைமையில் போருக்கு ஆள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். கோயிலினுள் பிரார்த்தனை கூட்டத்தில் இருந்தோர் ஒவ்வொருவராக எழுந்து வெளியே வந்தனர்.

ஆண்கள் யாரும் வீட்டுக்கு போகவில்லை. முரசறைவோரின் அருகில் நின்று கொண்டனர். தங்கள் உரிமைக்காக, மன அமைதிக்காக போருக்குச் செல்ல அவர்கள் மனதிடத்தோடு நின்றனர்... ஏறக்குறைய முந்நூறு பேர்.

(ஜனவரி 21, 1776 நடந்த உண்மைக்கதை இது.. அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தில் பாதிரியார் பீட்டர் முலன்பர்க்கின் பங்கு அளவிடற்கு அரிது. பாதிரியார் தன் உடன் வந்த விவசாயக் குடியினரோடு வெர்ஜீனியா மாகாணத்தின் எட்டாவது படைப்பிரிவின் தளபதி பொறுப்பை ஏற்றார். போரின்போது உயர்ந்த பதவிகளை வகித்தார். போருக்குப் பின் ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களுக்கு அடுத்தபடியாக வைத்துப் பார்க்கப்பட்டவர். 1785 ஆம் ஆண்டு பென்சில்வேனியா மாகாணத்துக்கு துணை ஜனாதிபதி பதவி வகித்தார். அப்போது பெஞ்சமின் பிராங்கிளின்தான் ஜனாதிபதி.)


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்



கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு-18

திருமதி. ரெமினா சுஜித்

**திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு - பகுதி 19**

முந்தைய அத்தியாயத்தின் இறுதியில், குருவானவர் ஜேம்ஸ் ஹஃப் (Rev. James Hough) திருநெல்வேலிக்கு வந்ததையும், அவர் தொடங்கிய பள்ளிகள் திருச்சபையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன என்பதையும் காணவிருக்கிறோம் என்று முடித்திருந்தோம்.

மேய்ப்பனில்லாத மந்தையாகத் தவித்த திருநெல்வேலி மண்ணின் சபைகளுக்கு, குருவானவர் ஹஃபின் வருகை ஒரு வசந்த காலத்தின் தொடக்கமாகவே அமைந்தது. அவர் வெறும் கல்விப் பணிகளோடு நின்றுவிடாமல், திருச்சபையின் ஆவிக்குரிய அடித்தளத்தை எவ்வாறு பலப்படுத்தினார் என்பதை இந்தப் பகுதியில் பார்ப்போம்.

1818-ஆம் ஆண்டளவில், பாளையங்கோட்டையில் தங்கியிருந்த ஆபிரகாம் மட்டுமே திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த ஒரே ஒரு இந்திய குருவானவராக இருந்தார். ஆனால், இதற்கிடையே 1817-ஆம் ஆண்டில் குருவானவர் போலே (Rev. Pohle) மேலும் மூன்று உபதேசியர்களைக் குருவானவர்களாக அபிஷேகம் செய்திருந்தார். அவர்கள்: பாக்கியநாதன், நல்லதம்பி மற்றும் விசுவாசநாதன் (இவருக்கும் ஆபிரகாம் என்ற மற்றொரு பெயர் இருந்தது). 1819-ல் விசுவாசநாதன் நாசரேத்து சபைக்கு அனுப்பப்பட்டார்; அதே நேரத்தில் ஆபிரகாம் முதலூருக்குச் சென்றார்.

விசுவாசநாதனைக் குறித்து குருவானவர் ஹஃப் மிகுந்த நன்மதிப்பைக் கொண்டிருந்தார். 1819-ல் அவர் கொடுத்த அறிக்கை ஒன்றில் விசுவாசநாதனைக் குறித்து சில வார்த்தைகள் எழுதியிருக்கிறார்: **"அவர் சிறந்த திறமைகளும், மெய்யான ஆவிக்குரிய பக்தியும் கொண்ட ஒரு மனிதராகக் காணப்படுகிறார். அவரது சபையாருக்கு அவர் அளித்த பிரசங்கத்தை நான் கேட்டேன்; அவர் பெற்றிருந்த சாதாரண கல்வியை விட, ஒரு உயர்கல்வி கற்ற குருவானவர் செய்யும் பிரசங்கத்திற்கு இணையான ஆழம் அதில் இருந்தது."**

பின்னர் 1824-ல் திருநெல்வேலியை விட்டுச் சென்ற பிறகு குருவானவர் ஹஃப் அவரைப் பற்றி எழுதும்போது, **"அவரது பக்தி, திறமை மற்றும் கிறிஸ்தவ சாந்தம் ஆகியவை உள்ளூர் விசுவாசிகளின் அன்பையும், புறமதத்தவர் மற்றும் முகமதியர்களின் மரியாதையையும் அவருக்குப் பெற்றுத்தந்தது"** என்று குறிப்பிடுகிறார்.

அந்தக் காலத்தில் ஆபிரகாம் (மற்றும் விசுவாசநாதன்) ஆகியோரின் மாத ஊதியம் சுமார் **'ஏழு ஸ்டார் பகோடாக்கள்'** (Star Pagodas - அக்கால நாணயம்) ஆக இருந்தது. உபதேசியர்களின் சம்பளம் மற்றும் ஆபிரகாமின் பயணச் செலவுகள்

என மாதம் 35 ஸ்டார் பகோடாக்கள் தேவைப்பட்டன. இவையனைத்தும், குருவானவர் ஸ்வார்ட்ஸ் ஐயர் விட்டுச்சென்ற நிதியின் வட்டியிலிருந்தே வழங்கப்பட்டன.

**சபைகளின் வளர்ச்சியும், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையும்**

குருவானவர் ஆபிரகாம் அளித்த தகவல்களின் அடிப்படையில், 1818-ல் திருநெல்வேலி முழுவதும் சிறியதும் பெரியதுமாக 63 சபைகள் இருந்தன என்று குருவானவர் ஹூஃப் அறிக்கை அளித்தார். மொத்தக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2830 ஆக இருந்தது. இதுமட்டுமல்லாமல், திருவிதாங்கூரின் பக்கத்து கிராமங்களில் 270 பேர் திருநெல்வேலி மிஷனின் கீழ் இருந்தனர். சில சபைகளில் 400-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் இருந்தனர்.

Rev.ஹூஃப் தனது குறிப்பில், **"இந்தக் கிறிஸ்தவர்களில் சிலர் விவசாயிகள் போன்ற பின்னணியைக் கொண்டவர்கள்; ஆனால் பெருமளவில் அவர்கள் பனைத்தொழில் செய்பவர்களாகவே காணப்படுகிறார்கள்"** என்று பதிவு செய்துள்ளார். (குறிப்பு: பற்பநாதபுரம் மற்றும் பூவாணி சபைகளைப் பற்றி ஹூஃப் அப்போது அறிந்திருக்கவில்லை).

**1814 முதல் 1818 வரையிலான ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தின் விவரங்கள் ஆச்சரியமளிக்கின்றன:**

| விவரம் | 1814 | 1815 | 1816 | 1817 | 1818 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| குழந்தைகள் | 46 | 162 | 106 | 98 | 117 | 529 |
| புறமதத்திலிருந்து வந்தவர்கள் | 12 | 61 | 69 | 25 | 52 | 219 |
| ரோமன் கத்தோலிக்கத்திலிருந்து மாறியவர்கள் | 4 | 13 | 5 | 13 | - | 35 |
| மொத்தம் | 62 | 236 | 180 | 136 | 169 | 783 |

**ஆவிக்குரிய வறட்சியும், ஹூஃபின் மனவேதனையும்:**

தனது முதல் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக Rev. ஹூஃப் சில கிராமப்புற சபைகளைப் சென்று பார்த்தார். ஆனால், அங்குள்ள பள்ளிகளின் நிலையையும், சபையின் ஆவிக்குரிய நிலையையும் கண்டு அவரால் திருப்தியடைய முடியவில்லை. அவரது **வேதனை நிறைந்த வார்த்தைகள் இதோ:**

"பள்ளிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன; முறையான ஆசிரியர்கள் இல்லாததால், அவை உபதேசியர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்களோ கவனக்குறைவாக இருக்கிறார்கள். பள்ளிகளில் ஒரு புத்தகம் கூட இல்லை; ஓலைச்சுவடிகளையே பயன்படுத்துகிறார்கள்... இதனால் பெரும்பாலான மக்கள் புறமதத்தினரைப் போல ஆவிக்குரிய இருளிலேயே வாழ்கின்றனர். தாங்கள் ஏன் கிறிஸ்தவர்கள் என்பதே பலருக்குத் தெரியவில்லை; கிறிஸ்தவத்தின் அடிப்படைகளே அவர்கள் காதுகளுக்குப் புதியதாக இருக்கின்றன. இதனால், இவர்களது நடத்தை புறமதத்தினரை ஈர்ப்பதற்குப் பதிலாக முகம் சுளிக்கவே வைக்கிறது. தங்களுக்குள்ளேயே வெளிச்சம் இல்லாதபோது, **'மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது'** என்ற வார்த்தையின்படி அவர்களால் எப்படி வாழ முடியும்?"



குருவானவர் ஹூஃப்

இதைக் கண்ட Rev. ஹூஃப் சும்மா இருக்கவில்லை. உடனடியாக மெட்ராஸ் குழுவினரைத் தொடர்புகொண்டு, மாதம் 1½ பகோடா சம்பளத்தில் பள்ளி ஆசிரியர்களை நியமிக்க வற்புறுத்தினார். மேலும், புதிய ஏற்பாடு, மோட்சப் பிரயாணம், பாமாலைகள் மற்றும் உபதேச வினாவிடைப் புத்தகங்கள் (Catechisms) ஆகியவற்றைத் தமிழில் அனுப்புமாறு கெஞ்சிக் கேட்டார். புத்தகங்கள் வந்தன; மக்கள்

அதை மிகுந்த ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டனர்.

**நாசரேத் மற்றும் முதலூரில் ஒரு மறுமலர்ச்சி!**

1819 செப்டம்பரில் நாசரேத் மற்றும் முதலூருக்கு Rev. ஹூஃப் சென்றபோது கண்ட காட்சி, மிஷனரிகளின் உழைப்பு ஒருபோதும் வீண்போகாது என்பதை அவருக்கு உணர்த்தியது. "அங்குள்ள மக்கள் தங்கள் குருவானவர்கள் மீது மிகுந்த அன்பு வைத்துள்ளார்கள்... அங்கே சென்றபோது மக்கள் அடைந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. மிஷனரிகள் இல்லாத இத்தனை காலத்திலும், கிறிஸ்து மற்றும் கிறிஸ்தவத்தின் சாந்தமும் சமாதானமும் அவர்களை ஒற்றுமையாகக் காத்து வந்ததைக் காணும்போது அவருக்கு நெகிழ்ச்சியாக இருந்தது."

அங்கு ஒரு தென்னை மரத்தின் நிழலில், பெண்கள் சிலர் பருத்தி நூற்றுக்கொண்டே லூத்தரன் பாமாலைகளைப் பாடிக்கொண்டிருந்தனர். ஆராதனைக்குப் பின்னரும் மக்கள் கலைந்து செல்லாமல், தேவாலயத்தின் வாசலில் அமர்ந்து வெகுநேரம் பாமாலைகளைப் பாடினர். 20 ஆண்டுகளுக்கு முன்பு மிஷனரி கெரிக்கே (Gericke) ஐயரால் ஞானஸ்நானம் பெற்ற இரண்டு முதியவர்கள், கெரிக்கே ஐயர் தங்களுக்குக் கற்றுக்கொடுத்த பாடல்களை ஹூஃப் ஐயருக்காகப் பாடிக்காட்டினர்.

ஹூஃப் ஐயர் எழுதுகிறார்: "மிஷனரிகளின் உழைப்பு வீணாகிவிட்டது என்று கூறுபவர்களுக்கு இந்தக் கிராமங்களே சிறந்த சாட்சி. இங்கிலாந்தில் உள்ள நகரங்களில் கூட இவ்வளவு ஆழமான ஆவிக்குரிய கிறிஸ்தவ பக்தியை நான் கண்டதில்லை. ஒரு புறமதத்தவர் என்னிடம் வந்து, **'இது மிகவும் அமைதியான, நல்ல இடம்'** என்று உண்மையாகவே சாட்சியளித்தார்."

**கல்விப்பணியின் விரிவாக்கம்:**

1819-ஆம் ஆண்டில் Rev. ஹூஃப் அவர்கள் C.M.S. (சர்ச் மிஷனரி சொசைட்டி) நிதியின் கீழ் திருநெல்வேலி, திருநெல்வேலி பேட்டை, குறிச்சி, நாசரேத் மற்றும் முதலூர் ஆகிய இடங்களில் தமிழ்வழி கல்விப் பள்ளிகளைத் திறந்தார். மேலும், நாசரேத்தில் இரண்டாவது பயிற்சிப் பள்ளியையும் (Seminary) அவர் தொடங்கினார். அந்த ஆண்டின் இறுதியில், பாளையங்கோட்டை பயிற்சிப் பள்ளியில் மொத்தம் எட்டு மாணவர்கள் பயின்று வந்தனர். அவர்களில் மூவர் சுமார் 17 வயதுடையவர்கள், மற்றவர்கள் 12 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள். பாளையங்கோட்டையைச் சேர்ந்த உபதேசியாரும், ஆலயப் பராமரிப்பாளருமே (sexton) இவர்களுக்கு ஆசிரியர்களாகச் செயல்பட்டனர். நாசரேத் பயிற்சிப் பள்ளியில் அப்போது மூன்று மாணவர்கள் மட்டுமே இருந்தனர், அவர்களுக்கு விசுவாசநாதன் என்பவர் கற்பித்தார். ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் அரை பகோடா கல்வி உதவித்தொகையாக (Scholarship) வழங்கப்பட்டது.

1820-ஆம் ஆண்டில், S.P.C.K.-யின் மெட்ராஸ் குழு, கல்கத்தா பிஷப்பின் மனமார்ந்த ஒப்புதலுடன், திருநெல்வேலியில் நடைபெறும் பள்ளிப் பணிகளுக்காக மே மாதம் முதல் மாதம் ரூ.40 மானியமாக வழங்க முன்வந்தது. எனவே, S.P.C.K. கிராமங்களில் C.M.S. ஆதரவில் செயல்பட்டு வந்த பள்ளிகளை S.P.C.K. கணக்கின் கீழ் மாற்றுவதற்குத் குருவானவர் ஹூஃப் C.M.S. கடிதத் தொடர்பு குழுவுடன் பேசி ஏற்பாடு செய்தார். அந்த காலகட்டத்தில், குலசேகரன்பட்டினம் மற்றும் தருவை ஆகிய இடங்களில் புதிதாகப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருந்தன. மேலும், மக்களிடம் எடுத்துச்சொல்லி சம்மதத்தைப் பெற்ற பிறகு, நாசரேத் மற்றும் முதலூரில் பெண்பிள்ளைகளுக்கென பிரத்தியேகப் பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த உதவியைப் பெற்றுக்கொண்ட குருவானவர் ஹூஃப், C.M.S. (Church Missionary Society) குழுவினருடன் இணைந்து ஒரு சிறப்பான நிர்வாக ஏற்பாட்டைச் செய்தார். அதன்படி, C.M.S. ஆதரவில் S.P.C.K. கிராமங்களில் செயல்பட்டு வந்த பள்ளிகள் அனைத்தும் S.P.C.K. அமைப்பின் பராமரிப்பிற்கு மாற்றப்பட்டன.

இதில் மிகவும் நெகிழ்ச்சியான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வு என்னவென்றால், குலசேகரன்பட்டினம் மற்றும் தருவை ஆகிய இடங்களில் புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகள் மட்டுமல்லாமல், நாசரேத் மற்றும் முதலூரில் பெண்களுக்கென பிரத்தியேகமாகத் தொடங்கப்பட்ட பள்ளிகளும் இதில் அடங்கும். அக்காலகட்டத்தில் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு காரியமாக இருந்தது. மக்களிடம் பல கட்டங்களில் மன்றாடி, அவர்களைப் பேசிச் சம்மதிக்க வைத்து, பெரும் போராட்டத்திற்குப் பிறகே இந்தப் பள்ளிகளை ஹூஃப் ஐயர் தொடங்கினார்.

ஆகஸ்ட் 1820-ல் S.P.C.K. அமைப்பிற்கு ஹூஃப் தனது மூன்றாவது அறிக்கையைக் கொடுத்தபோது, இந்தப் பள்ளிகளின் பொறுப்பு மாற்றங்கள் முழுமையாக முடிவடைந்திருந்தன. அதுமட்டுமல்லாமல், S.P.C.K. கிராமங்களில் கர்த்தருடைய கிருபையால் மேலும்

இரண்டு புதிய பள்ளிகள் திறக்கப்பட்டிருந்தன. அந்தப் பள்ளிகளின் வளர்ச்சி குறித்த புள்ளிவிவரங்கள் அடங்கிய பட்டியலையே அவர் தனது அறிக்கையில் சமர்ப்பித்தார்.

**மாணவர்களின் எண்ணிக்கை (S.P.C.K. பள்ளிகள்):**

| ஊர் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாளையங்கோட்டை | 42 |
| நாசரேத் - சிறுவர்கள் | 34 |
| நாசரேத் - சிறுமிகள் | 10 |
| முதலூர் - சிறுவர்கள் | 47 |
| முதலூர் - சிறுமிகள் | 11 |
| குலசேகரன்பட்டினம் | 38 |
| தருவை | 26 |
| பட்டி | 25 |
| ஹூப்ரும்கோட்டை | 50 |
| மொத்தம் | 283 |

**1819 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த C.M.S. பள்ளிகளின் விவரங்கள்:ஆங்கிலப் பள்ளிகள்:**

| ஊர் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாளையங்கோட்டை | 38 |
| திருநெல்வேலி | 21 |
| மொத்தம் | 59 |
| | |
| **தமிழ் பள்ளிகள்:** | |
| ஊர் | மாணவர்களின் எண்ணிக்கை |
| பாளையங்கோட்டை | 57 |
| தச்சநல்லூர் | 41 |
| மேலப்பாளையம் | 52 |
| திருநெல்வேலி | 41 |
| பேட்டை | 36 |
| குறிச்சி | 41 |
| மொத்தம் | 268 |


பிரியமானவர்களே, ஒருபுறம் பள்ளிகள் இல்லாமல் ஓலைச்சுவடிகளில் படித்த காலம், கையில் வேதப்புத்தகம் இல்லாததால் இருளில் வாழ்ந்த மக்கள். ஆனால் கர்த்தரோ குருவானவர் ஹூஃப் என்ற ஒரு தனி மனிதனின் ஆத்தும பாரத்தின் மூலமாக ஒரு மாபெரும் எழுப்புதலை நமது திருநெல்வேலி திருமண்டலத்தில் கொண்டுவந்தார். எவ்விதப் போட்டி பொறாமையோ, சுயநலமோ இன்றி, தேவனுடைய ராஜ்யம் கட்டப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அந்த மிஷனெரிகளும் குருவானவர்களும் உபதேசியாரும் கர்த்தருக்காக உழைத்ததே இன்று நாம் காணும் மாபெரும் திருச்சபை! அன்று கர்த்தரின் பணியைச் செய்த மிஷனரிகளும், குருவானவர்களும், உபதேசியாரும் எவ்விதப் போட்டி பொறாமையுமின்றிப் பணியாற்றினார்கள். ஊழியர்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் நன்னடத்தைகளை மனதாரப் பாராட்டும் குணமும், சோர்வடையும் போது தட்டிக் கொடுத்து ஊக்கமளிக்கும் பண்பும் தவறு செய்யும்போது கண்டிக்கும் பண்பும் நிறைந்திருந்தது. இன்று அந்த ஆதி அன்பின் ஐக்கியம் காணப்படுகிறதா? சிந்திப்போம்!

இன்று நம் சபைகளிலும், வீடுகளிலும் அந்த ஆவிக்குரிய பாடல்களும், ஐக்கியமும், வேத வாசிப்பும் எங்கே சென்றன? அன்று அவர்கள் வெறும் ஓலைச்சுவடியை வைத்துக்கொண்டு இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தார்கள்; ஒரு கிராமத்தையே சாந்தமான இடமாக மாற்றினார்கள். ஆனால் இன்று, நம் கைகளில் முழு வேதாகமம் இருந்தும், நவீன வசதிகள் அனைத்தும் இருந்தும் நாம் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஒரு மிஷனரிக்காகப் பல ஆண்டுகள் ஏங்கித் தவித்த அந்த மக்களின் தாகம் இன்று நம்மிடம் உள்ளதா? சிந்திப்போம்.

வரலாற்றின் பக்கங்களிலிருந்து மீண்டும் கர்த்தருடைய ஆவியானவர் நம்மோடு பேசுவாராக!

**தொடர்ந்து பயணிப்போம்...**





# உடைந்த ஃபிராங்க் செதுக்கப்பட்ட கதை!

## ஒரு மிஷனரி உலகையே வாசிக்க வைத்த புரட்சிக் கதை...

பேசும் பொம்மை ஷாந்தகுமார்

### 1. தோல்வியிலிருந்து ஜோதியாக

ஃபிராங்க் லாபாக் 1884, செப்டம்பர் 2-ம் தேதி அமெரிக்காவின் பென்டன் நகரில் பிறந்தார். 1915-இல், கடவுளின் ஊழியத்துக்காக பிலிப்பைன்ஸுக்கு தன் மனைவியுடன் பயணமானார். 14 ஆண்டுகள் கழிந்தும், ஒரு மோரோ முஸ்லிம்கூட மனம் திரும்பவில்லை. மிகவும் வருந்தினார். "நான் ஒரு தோல்வி" என்று கண்ணீரோடு எழுதினார்.

1930-இல், உடைந்த உள்ளத்தோடு, பிலிப்பைன்ஸ் நாட்டின் மராவி நகரில் உள்ள சிக்னல் மலையில் ஏறி ஜெபித்தார். அவர் தேவனிடம் கேட்ட ஒரே கேள்வி: "தேவனே, நீர் என்ன விரும்புகிறீர்?"

அங்கே அவர் ஒரு பரிசோதனையைத் தொடங்கினார். ஒவ்வொரு நிமிடமும் தேவனை நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

"இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்"-1 தெசலோனிக்கேயர் 5:17.

அவர் காத்திருந்தபோது, தேவன் அவரது விரக்தியை அன்பாக மாற்றினார். அந்த அன்பு ஒரு தேவையைக் கண்டு பிடித்தது: மக்களுக்குப் படிக்கத் தெரியவில்லை.

**நமக்கானப் பாடம்:**
**நம் வாழ்க்கையில் தோல்வியா?**

- நாம் செய்ய வேண்டியது... இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும். ஒரு நிமிடத்தில் ஒரு செகண்டாவது அவரை நினைக்க வேண்டும்.
- அடுத்து கடவுளிடம், "தேவனே, நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்?" என்ற கேள்வியை அவர் முன் வைக்க வேண்டும். அவருடைய பதிலை உன்னிப்பாகக் கேட்க வேண்டும்.
- அப்பொழுது ஆண்டவர், மக்களின் தேவையை நம்மிடம் வெளிப்படுத்துவார்.

### 2. குருடனுக்குக் கிடைத்த முதல் வெளிச்சம்

1935-இல் லாபாக் "ஒவ்வொருவரும் மற்றொருவருக்குக் கற்றுக் கொடு" (Each One Teach One) என்ற புதிய திட்டத்தோடு இந்தியா வந்தார். ஒரு புழுதி நிறைந்த கிராமத்தில், பிறவிக் குருடரான லல்லு என்ற முதியவரைச் சந்தித்தார். லல்லு சொன்னார், "என் வாழ்க்கையில் இருளுக்கு

மேல் இருள் நான் என்ன செய்ய வேண்டும்?"

ஃபிராங்க் அவருடன் நாட்கணக்கில் அமர்ந்து, லல்லுவின் உள்ளங்கையில் எழுத்துக்களை வரைந்து காட்டினார். மெதுவாக, வேதனையோடு, லல்லு கற்றுக் கொண்டார். ஒரு மதியம், மராத்தி வார்த்தையான 'தேவ்' - "கடவுள்" - என்பதை வரைந்தபோது அவர் அழுதே விட்டார். "வாழ் நாள் முழுவதும் நான் குருடனாக இருந்தேன்," என்று கதறினார் லல்லு, "ஆனால் இன்று நான் காண்கிறேன்!" இது ஃப்ராங்கின் மனதைத் தொட்டது.

ஆனால் லல்லு அவருடைய கண்களைப் பற்றிச் சொல்லவில்லை. முதன் முறையாக, அவரால் கடவுளின் பெயரைப் படிக்க முடிந்தது.

"குருடருக்கு நான் கண்ணாயிருந்தேன்"யோபு 29:15.

அந்தத் தருணமே லாபாக்கின் மனதிலே ஒரு தீப்பொறி. எழுத்தறிவு என்பது வெறும் எழுத்துக்கள் அல்ல. மக்கள் தேவனால் காணப்படுகிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரியப் படுத்துவதே முக்கியம் என்பதை உணர்ந்தார்.

**நமக்கானப் பாடம்:**

- மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய கடவுள் நமக்கும் ஒரு திட்டத்தை வெளிப் படுத்துவார்.
- நாம் அதனை செயல்படுத்த வேண்டும்.
- அப்பொழுது அத்திட்டம் விரிவடையும். பலனும் கொடுக்கும்.

### 3. ஆத்துமாக்களை மீட்ட அசைகள்

அந்தக் கதையிலிருந்து ஒரு இயக்கம் பிறந்தது. லாபாக் உள்ளூர் மொழிகளில் எளிய அட்டவணைகளை உருவாக்கினார். படிக்கத் தெரிந்த ஒருவர், தெரியாத ஒருவருக்குக் கற்றுக் கொடுத்தார்.

"மனுஷர் முன்பாக உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது"-மத்தேயு 5:16.


இந்தியாவில், குறிப்பாக ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் வட இந்தியாவில் உள்ள சில இடங்களில், ஆறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் படிக்கக் கற்றுக் கொண்டனர்.

விவசாயிகள் விதைப் பாக்கெட்டுகளைப் படித்தனர். தாய்மார்கள் மருந்துப் பாட்டில்களைப் படித்தனர். பிள்ளைகள் வேதத்தைப் படித்தனர்.

ஒரு மனிதன் மக்களுக்குப் பிரசங்கிப்பதை நிறுத்திவிட்டு, தேவனுக்குச் செவி கொடுக்கத் தொடங்கியதால், தொடப் பட்ட கிராமங்கள் அனைத்தும் மாறின; முன்னேறின.

இதனால் இவரை "கல்லாதவர்களின் அப்போஸ்தலர்" என்று அழைக்கப் படுகிறார்.

### 4. எழுத்தறிவு எப்படி நற்செய்தியாயிற்று?




கல்லாமை என்பது மக்களுக்கும் தேவ வார்த்தைக்கும் இடையே உள்ள ஒரு மதில் சுவர் என்று லாபாக் நம்பினார். எனவே "ஒவ்வொருவரும் ஒருவருக்குக் கற்றுக் கொடு" என்ற திட்டம் மூன்று எளிய வழிகளில் நற்செய்தியைச் சுமந்து சென்றது:

1. **பாடப் புத்தகங்களில் வேதம்:** அவரது அட்டவணைகள் வேதத்திலிருந்து "முக்கிய வார்த்தைகளைப்" பயன்படுத்தின. படிக்கக் கற்றுக் கொள்ளும் போதே கற்போர் தேவனைச் சந்தித்தனர்.
2. **ஒவ்வொரு வாசகரும் ஒரு மிஷனரி:** புதிதாகப் படிக்கக் கற்ற ஒவ்வொருவரும் மற்றொருவருக்குக் கற்றுக் கொடுக்கும்படி கோரப் பட்டனர். வேதப் பகுதிகளையே முதல் பாடங்களாகப் பயன்படுத்தினர். ஆசிரியர்-மாணவர் பந்தம் விசுவாச ஐக்கியமாக மாறியது.
3. **பாடமாக அன்பு:** ஏழைகளிடம் காட்டப்பட்ட பொறுமையும் கண்ணியமும் வார்த்தைகளை விட உரக்க கிறிஸ்துவைப் பிரசங்கித்தது.

கற்பித்தலே ஆராதனையானது. இதை அவர் "எழுத்தறிவு நற்செய்தி ஊழியம்" என்று அழைத்தார்! வாசிப்பும், மீட்பும் ஒன்றாகக் கை கோர்த்தன.

### 5. நிலைத்து நிற்கும் பாடம்

"ஒவ்வொரு நபரையும் அன்பினால் காந்தமாக்கி மற்றவர்களை ஈர்ப்பதே கிறிஸ்துவின் எளிய திட்டம்" என்று லாபாக் நம்பினார். அவர் 1970-இல் மறைந்தார். ஆனால் அவரது இசை இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

103 நாடுகளில் 15 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் "ஒவ்வொருவரும் மற்றவருக்குக் கற்றுக் கொடு" எனும் திட்டத்தின் மூலம் படிக்கக் கற்றுக் கொண்டனர். இதனால் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்ட மூன்று முக்கிய நாடுகள் பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் எகிப்து.

"உங்கள் மிகப் பெரிய தோல்வியே தேவனுடைய வாசலாக இருக்கலாம்!"

ஃபிராங்க் லாபாக் சிக்னல் மலையில் ஒரு தோல்வியாக ஏறி, உலகத்தையே ஒளிரச் செய்த ஒரு தெய்வப் பணியோடு இறங்கினார். ஏனென்றால் அவர் முதலில் செவி கொடுத்தார்.

"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்; அதனால் நாங்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறோம்"-சங்கீதம் 126:3.

சோகக் கீதத்தோடு மலையில் ஏறின ஃப்ராங்க், ஒரு வெற்றிப் பாடலோடு திரும்பினார்!

ஒவ்வொருவரையும் மற்றவர்கள் மூலமாக தனித் தனியாகப் படிக்க வைத்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்.

### ஆம்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்:

1) படிப்பறிவு


2) தெய்வீக அறிவு

ஃப்ராங்க் ஐம்பதுக்கும் அதிகமான புத்தகங்கள் எழுதியுள்ளார். மேலும் 'மாடர்ன் மிஸ்டிக்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட இவருடைய கடிதங்கள் அந்நாட்களில் மிகவும் புகழ் பெற்றவை. அமெரிக்க மிஷனரிகளில் இவருடைய புகைப் படத்தைக் கொண்ட ஸ்டாம்பு மட்டுமே வெளியிடப் பட்டுள்ளது.

### நமக்கானப் பாடம்:

- நாமும் கர்த்தருடைய துணையுடன் சமூகத்துக்குத் தேவையான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.
- அதில் சமூகப் பிரச்னைக்கானத் தீர்வும் இருக்க வேண்டும். கிறித்தவச் செய்தியும் வழங்கப் பட வேண்டும்.
- நம் ஜெபம் வெற்றியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை!

"கர்த்தர் என் வெற்றிப் பதக்கங்களை எண்ண விரும்பமாட்டார், என் காயத் தழும்புகளையே எண்ணுவார்!" - ஃப்ராங்க் லாபாக்






## டிஜிட்டல் பாதுகாப்புப் பணிக்கு உங்கள் கரம் நீட்டுங்கள்!

கிறிஸ்தவ வரலாற்று சங்க நூலகம் மற்றும் அருங்காட்சியகம், நூற்றாண்டுகள் பழமையான கிறிஸ்தவ வரலாற்று நூல்கள், அரிய ஆவணங்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய புகைப்படங்களை சேகரித்து பாதுகாத்து, அவற்றை டிஜிட்டல் வடிவில் மாற்றும் மிகப்பெரிய வரலாற்றுப் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பணியின் மூலம் அழிந்து வரும் வரலாற்றுச் செல்வங்கள் உயர்தர ஸ்கேனிங் தொழில்நுட்பத்தின் உதவியுடன் PDF மற்றும் பிற டிஜிட்டல் வடிவங்களாக மாற்றப்பட்டு, ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், திருச்சபைகள் மற்றும் வருங்கால தலைமுறையினருக்காக பாதுகாக்கப்படுகின்றன.

இதுவரை 14,000-க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் வெற்றிகரமாக டிஜிட்டல் வடிவில் மாற்றப்பட்டுள்ளன.

இந்த இறைப்பணியை மேலும் விரிவுபடுத்த உயர்தர ஸ்கேனர், கணினி, சேமிப்பு (Storage), சர்வர், காப்பு (Backup) வசதிகள் மற்றும் டிஜிட்டல் பராமரிப்பு செலவுகளுக்காக உங்கள் நன்கொடை மிகவும் அவசியமாக உள்ளது.

**நீங்கள் பங்கெடுக்கலாம்:**

1. பழமையான கிறிஸ்தவ நூல்களை வழங்கலாம்.
2. அரிய ஆவணங்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை பாதுகாப்பிற்காக ஒப்படைக்கலாம்.
3. டிஜிட்டல் பாதுகாப்புப் பணிக்காக பொருளாதார நன்கொடை வழங்கலாம்.
4. இந்த ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபத்தில் நினைவுகூரலாம்.

உங்கள் ஒவ்வொரு பங்களிப்பும், ஒரு வரலாற்று ஆவணத்தை அழிவிலிருந்து காப்பாற்றி, அடுத்த தலைமுறைக்கு பாரம்பரியமாக வழங்கும் மகத்தான முதலீடாக அமையும்.

**"வரலாற்றைப் பாதுகாப்போம் - வருங்கால தலைமுறைக்கு பாரம்பரியத்தை வழங்குவோம்."**



கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலகம் மற்றும் அருங்காட்சியகத்திற்கு, திருநெல்வேலி திருமண்டலம் வடக்கு சபை மன்றத் தலைவர் அருள்திரு. A. ஜெபரத்தினம் அவர்கள் ஏற்பாட்டின் பேரில், வடக்கு சபை மன்றத்தின் உபதேசியார்கள் வருகை தந்தனர்.

இவ்வருகையின் போது, வடக்கு சபை மன்றத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தி நூலாக வெளியிடுவது தொடர்பாக விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. சபையின் பாரம்பரியம், முன்னோடிகளின் பங்களிப்புகள், முக்கிய நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளைத் தொகுத்து பாதுகாப்பதன் அவசியம் குறித்து கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

வடக்கு சபை மன்ற வரலாற்றை எழுதுவது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனையின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் (CHS)





கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலகம் மற்றும் அருங்காட்சியகத்திற்கு இன்று வருகை தந்த சுரண்டை காவல் ஆய்வாளர் மதிப்பிற்குரிய திரு. E. சாம்சன் அவர்கள், 60-க்கும் மேற்பட்ட அரிய மற்றும் பழமையான வரலாற்று நூல்களை நன்கொடையாக வழங்கினார்.

இந்த மதிப்புமிக்க நூல்களை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலகம் மற்றும் அருங்காட்சியகத்தின் சார்பில் திரு. மன்னா செல்வகுமார் அவர்கள் பெற்றுக்கொண்டார். கிறிஸ்தவ வரலாற்று ஆவணங்கள் மற்றும் பாரம்பரியச் சுவடுகளைப் பாதுகாக்கும் பணிக்கு உறுதுணையாக இந்நூல்களை வழங்கிய திரு. E. சாம்சன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.

"வரலாற்றைப் பாதுகாப்பது, வருங்கால தலைமுறைக்கான அறிவுச் செல்வத்தைப் பாதுகாப்பதே ஆகும்."

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** (CHS)





# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

தமிழகக் கிறிஸ்தவ திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1780 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/

# சிறுபான்மையினர் நலத்துறை ஆய்வுக் கூட்டம்:

**தென்காசியில் சிறுபான்மையினர் நலத்துறை ஆய்வுக் கூட்டம்: கிறிஸ்தவ அமைப்புகள் பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு**

தென்காசி, ஜூன் 3:

தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஏ. எம். ஷாஜகான் அவர்கள் தலைமையில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று சிறுபான்மையினர் நலத்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு தென்காசி மாவட்டத்தின் புதிய மற்றும் ஏழாவது மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுள்ள மதிப்பிற்குரிய திரு. ரஞ்சித் சிங், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் அதிகாரப்பூர்வ ஆய்வுக் கூட்டமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தில் கிறிஸ்தவ ஆலயங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள விவகாரங்கள், சமூக நலன் மற்றும் பொதுநலன் சார்ந்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனுக்கள் வழங்கப்பட்டு விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.


இந்நிகழ்வில் திருநெல்வேலி திருமண்டலம் சார்பாக சேகரத் தலைவர் அருட்திரு டி. சாமுவேல் அவர்கள் கலந்து கொண்டார். மேலும் தென்காசி மாவட்ட மகளிர் உதவிக்குழு சங்கம் சார்பாக திருமதி சந்திரா அவர்கள் பங்கேற்றார்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக அதன் ஒருங்கிணைப்பாளர் மன்னா செல்வகுமார் அவர்கள் கலந்து கொண்டு, தென்காசி மாவட்ட கிறிஸ்தவ திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ இயக்கங்கள் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் மற்றும் சமூக தேவைகளையும் பழைய ஆலயங்களை பாதுகாக்கவும் கோரிக்கை வைத்தார்.



# புனித தலைமை தேவதூதர் மைக்கேல் பேராலயம் பெல்கிரேட், செர்பியா (Cathedral of Saint Arch-angel Michael, Belgrade, Serbia)

சந்திரா மனோகரன், ஈரோடு



செர்பியா என்று அழைக்கப்படும் செர்பியக் குடியரசு ஐரோப்பாவில் அமைந்துள்ள ஒரு நிலஞ்சூழ் நாடாகும். இதன் தலைநகரம் பெல்கிரேட் ஆகும்.

இங்கு அமைந்துள்ள புனித தலைமை தேவதூதர் மைக்கேல் பேராலயம் கிழக்கு மரபு சார்ந்த ஒரு முக்கிய கிறிஸ்தவ ஆலயமாகும். இது 19-ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு முக்கிய கலாச்சார மற்றும் வரலாற்றுப் பாரம்பரியத் தளமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இன்றைய பேராலயம் அமைந்துள்ள இடத்தில், புனித தலைமை தேவதூதர் மைக்கேலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பழமையான தேவாலயம் இருந்ததாக, புராட்டஸ்டண்ட் பாதிரியாரும் பயண எழுத்தாளருமான ஸ்டெபன் கெர்லாக் (Stephan Ger-lach) என்பவர் 1573-1578 காலகட்டத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்த தேவாலயத்தின் வரலாறு மிகவும் வியப்பூட்டுவதாகும்.

17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் பயண எழுத்தாளர்களால் சேமிக்கப்பட்டிருந்த பல வரலாற்றுப் பதிவுகள், ஆஸ்திரிய-துருக்கிய மோதல்களின் போது அழிக்கப்பட்டன. மேலும், சேதமடைந்திருந்த செர்பிய தேவாலயங்களை மறுபுனரமைப்பு செய்யக்கூடாது என்று அக்காலத்திய ஆஸ்திரிய அரசு உத்தரவிட்டது.

இந்நிலையிலும், ரஷ்யாவின் முதல் பேரரசரான பீட்டர் தி கிரேட் அவர்களின் ஆதரவை எதிர்நோக்கி, பெருநகர ஆயரான மொய்சிஜே பெட்ரோவிச் (Mojsije Petrović) தலைமையில் தேவாலயத்தைப் புதுப்பிக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

ஆனால் 1739 ஆம் ஆண்டு துருக்கியர்கள் மீண்டும் படையெடுத்து, செர்பிய வரலாற்று நினைவுச் சின்னங்களை அழிப்பதில் தீவிரம் காட்டினர். அப்போது இந்த தேவாலயம் கொள்ளையடிக்கப்பட்டதுடன், அதன் கூரையும் இடிக்கப்பட்டது.

1830 ஆம் ஆண்டு, அப்போஸ்தலனாகிய புனித அந்திரேயாவின் திருநாளில், செர்பிய மக்களுக்கு மத வழிபாடுகளை சுதந்திரமாக நடத்த முழு அனுமதி வழங்கப்பட்டது. அதோடு, பழைய தேவாலயத்திற்கு அருகில் மரத்தால் ஆன ஒரு மணி கோபுரத்தைக் கட்டுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது.

இன்று, பழைய பேராலயத்தின் மணி அமைப்பிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டு, மேலும் நான்கு வரலாற்றுச் சிறப்புமிக்க மணிகளுடன், பெல்கிரேட் நகரின் மையப்பகுதியில் செர்பிய மரபுவழிக் கட்டிடக்கலையின் அழகை வெளிப்படுத்தும் ஒரு சிறப்புமிக்க விண்ணேற்ற ஆலயமாக இப்பேராலயம் திகழ்கிறது.

பேராலயத்தின் பாதுகாவலரான புனித தலைமை தேவதூதர் மைக்கேலின் திருவிழா நாளான 8 நவம்பர் 1845 அன்று, மெட்ரோபாலிடன் பீட்டர் ஜோவனோவிச் (Petar Jovanović) அவர்கள் கட்டி முடிக்கப்பட்ட தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்து, முதல் திருப்பலியையும் வழிபாட்டையும் நடத்தினார்.

இன்றும் இப்பேராலயம் செர்பிய மக்களின் ஆன்மீக, வரலாற்று மற்றும் கலாச்சார அடையாளத்தின் முக்கியச் சின்னமாக விளங்கி வருகிறது.

## திருநெல்வேலியின் முதல் நூலகச் சுவடு - பாளையங்கோட்டை மிஷன் நூலகம் வரலாற்றுப் பதிவு 1820 - 1821

திருநெல்வேலி - பாளையங்கோட்டையின் கல்வி மற்றும் அறிவுப் பாரம்பரியத்தில் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது பாளையங்கோட்டை மிஷன் நூலகம் (Palamcotta Mission Library). 1820-1821 காலகட்டத்தில், Church Missionary Society (CMS) அமைப்பின் வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்ட இந்த நூலகம், தென்னிந்தியாவின் ஆரம்பகால நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்த முயற்சியைத் தொடங்கியவர் Rev. James Hough பின்னர் Rev. Peter Fjellstedt தனது அரிய நூல் சேமிப்புகளை நன்கொடையாக வழங்கி நூலக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தார்.

உலக வரலாறு, கணிதம், புவியியல்,

சமயக் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கான நூல்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இங்கு சேகரிக்கப்பட்டன.

கல்வி, வாசிப்பு மற்றும் அறிவுப் பரவலுக்கான மையமாக விளங்கிய இந்த நூலகம், இன்று திருநெல்வேலியின் அறிவுசார் மரபை உருவாக்கிய முக்கிய வரலாற்றுச் சுவடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

ஒரு நகரின் வளர்ச்சி அதன் நூலகங்களின் வரலாற்றில் பிரதிபலிக்கிறது; அந்த வகையில் பாளையங்கோட்டை மிஷன் நூலகம், திருநெல்வேலியின் அறிவொளிப் பயணத்தின் தொடக்கச் சின்னமாகும்.



# மிஷனரிகளின் தியாகம்

## நமது முன்னேற்றத்தின் அடித்தளம்



**திரு. G. ஆல்வின் ஜேக்கப், தூத்துக்குடி**

**மிஷனரிகளின் தியாகம் - நமது முன்னேற்றத்தின் அடித்தளம்**

கிறிஸ்தவ மிஷனரிகள் இந்த நாட்டின் பல பகுதிகளுக்கு வந்து, சுவிசேஷத்தை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், கல்வி, மருத்துவம், சமூக நீதி, மனிதநேயம் போன்ற பல துறைகளிலும் மகத்தான சேவைகளைச் செய்தனர். அவர்கள் தங்கள் சொந்த நாடு, குடும்பம், வசதிகள் அனைத்தையும் விட்டுவிட்டு, அறிமுகமில்லாத மக்களுக்காக கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் தங்கள் வாழ்நாளையே அர்ப்பணித்தனர். அவர்களுடைய தியாகமும் அன்பும் இன்று நாம் அனுபவிக்கும் பல முன்னேற்றங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

ஒரு காலத்தில் கல்வி, மருத்துவ வசதி, சமூக மரியாதை ஆகியவற்றிலிருந்து விலக்கப்பட்டிருந்த பலதரப்பட்ட மக்களிடம் மிஷனரிகள் சென்றடைந்தனர். பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றை நிறுவி, எண்ணற்ற மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்தனர். கல்வியின் மூலம் அறியாமையை அகற்றினர்; மருத்துவத்தின் மூலம் நோய்களை நீக்கினர்; வேத வசனங்களின் மூலமாக நம்பிக்கையையும் புதிய வாழ்வையும் அளித்தனர்.

இன்று நாம் கல்வி கற்று, நல்ல வேலைவாய்ப்பைப் பெற்று, சமூகத்தில் மதிப்போடு வாழ்கிறோம் என்றால், அதற்குப் பின்னால் மிஷனரிகளின் அர்ப்பணிப்பான உழைப்பும் தியாகமும் மறக்க முடியாத பங்கைக் கொண்டுள்ளன. அவர்கள் விதைத்த விதைகளின் பலனையே நாம் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கிறோம்.

எனவே, மிஷனரிகளை நாம் வெறுமனே நினைவுகூருவது மட்டுமல்ல, அவர்களைப் போற்றவும் வேண்டும். அவர்கள் செய்த சேவைகளை அடுத்த தலைமுறையினருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வரலாற்றை அறிந்து, அவர்கள் செய்த தியாகங்களை நன்றியுடன் நினைவுகூர வேண்டும். நன்றியுணர்வு கொண்ட ஒரு சமுதாயமாக வாழ்வது நமது கடமையாகும்.

அதோடு, மிஷனரிகள் காட்டிய அன்பும் தியாகமும் நமது வாழ்க்கையிலும் வெளிப்பட வேண்டும். பிறருக்கு உதவுவது, ஏழைகளை உயர்த்துவது, கல்வியை ஊக்குவிப்பது, நோயாளிகளுக்கு ஆறுதல் கூறுவது, ஒடுக்கப்பட்டவர்களுக்கு துணை நிற்பது, கிறிஸ்துவின் அன்பை செயல்முறையில் வெளிப்படுத்துவது ஆகியவை மிஷனரிகளின் வாழ்க்கைப் பாடங்களாகும். அவர்கள் வாழ்ந்ததைப் போல நாம் வாழ முயற்சிக்கும்போதுதான் அவர்களுக்கு உண்மையான மரியாதை செலுத்தியவர்களாக இருப்போம்.

இயேசு கிறிஸ்து, **"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்"** என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளையைத் தங்கள் வாழ்க்கையால் நிறைவேற்றியவர்கள் மிஷனரிகளே. அவர்களுடைய தியாகம் நம்மை நன்றியுள்ளவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும், சேவை மனப்பான்மை கொண்டவர்களாகவும் மாறச் செய்திருக்கிறதா?

நாம் இன்று அனுபவிக்கும் முன்னேற்றம் நமக்குத் தானாகக் கிடைத்ததல்ல. பல மிஷனரிகளின் கண்ணீர், ஜெபம், உழைப்பு, தியாகம் ஆகியவற்றின் பலனாக அது நமக்குக் கிடைத்துள்ளது. ஆகையால், அவர்களை நன்றியுடன் போற்றுவோம். அவர்கள் காட்டிய அன்பையும் தியாகத்தையும் நம் வாழ்க்கையில் பின்பற்றுவோம். நம் மூலமாகவும் மற்றவர்களின் வாழ்க்கையில் ஒளியும் நம்பிக்கையும் மலரச் செய்வோம். அதுவே மிஷனரிகளுக்கு நாம் செலுத்தும் மிக உயர்ந்த நன்றிக்கடனாகும்.




திருநெல்வேலியில் இருந்து சாஸ்திரியார் குடும்பத்தினர்



சமுக சேவகர் மாரிமுத்து அவர்கள்



சென்னை மற்றும் தூத்துக்குடி ஊழியர்கள்



ஊழியர் மோகன கிருஷ்ணன் அவர்கள்



அருள்திரு.பாக்கியம் ஐயா மற்றும் அருள்திரு. ஐசக் தேவதாஸ் ஐயா அவர்கள்



அருள்திரு A. ஜெபரத்தினம் ஐயரவர்கள்
அருள்திரு.கிறிஸ்டோபர் மற்றும் திரு.மில்டன்





# Yearly Subscription

**600**

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history


Return Requested:

Tamil Printed Book- For Private Circulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Education- For Private Circulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401